செ.வெ.எண்: 22 நாள்: 15.03.2019

# நாகப்பட்டினம் மாவட்டம்
# சீர்காழி மற்றும் தரங்கம்பாடி வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் பாராளுமன்ற தேர்தல்-2019 ஐ முன்னிட்டு அமைக்கப்பட்டுள்ள வாக்குப்பதிவு மையங்களை

## மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் முனைவர் சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழி, குத்தாலம் மற்றும் தரங்கம்பாடி வட்டத்திற்குட்பட்ட கொடியம்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, மேலையூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, இலுப்பூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, சங்கரன்பந்தல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, மேக்கிரிமங்கலம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, வழுவூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் பாராளுமன்ற தேர்தல்-2019 ஐ முன்னிட்டு அமைக்கப்பட்டுள்ள வாக்குப்பதிவு மையங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

வாக்குப்பதிவு மையங்களைப் பார்வையிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

“நாகப்பட்டினம் மாவட்டத்தில் பாராளுமன்ற தேர்தல்-2019 ஐ முன்னிட்டு 100 சதவீதம் வாக்குப்பதிவினை எட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. புதிய வாக்காளர்களாகிய கல்லூரி மாணவ, மாணவியர்கள் தவறாமல் தங்களது வாக்கினை பதிவு செய்வதுடன், 100 சதவீத வாக்கை எட்டும் வகையில் தங்கள் அருகாமையில் வசிக்கும் அனைவரிடமும் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இந்த தேர்தலில் புதியதாக நாம் யாருக்கு வாக்களித்தோம் என்பதை தெரிந்து கொள்ள விவி பேட்(VVPAT) இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சீர்காழி, குத்தாலம் மற்றும் தரங்கம்பாடி வட்டத்திற்குட்பட்ட வாக்குசாவடி மையங்களில் குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, காற்றோட்ட வசதிகள், அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கு எளிதில் வாக்களிக்கும் வகையில் சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆய்வின்போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.செ.விஜயகுமார்,இ.கா.ப, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மீ.செல்வகுமார், வட்டாட்சியர்கள் திருமதி.சபிதாதேவி(சீர்காழி), திரு.சுந்தரம்(தரங்கம்பாடி) மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**